IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.45 /2018
Deposition of witness for DW1

Name : நீலமேகம்

Father's Name : மார்கபந்து

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2 day of September, 2021.

குறுக்கு விசாரணை

நான் முத்தரசிகுப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். எனக்கும், எனது மூத்த சகோதரர் சதாசிவத்திற்கும் 20 வயது வித்தியாசம் இருக்கும் என்றால் தெரியாது. என் வயது தெரியும். எனது தகப்பனார் விவசாயம் செய்து வந்த நிலமானது அவருக்கு சொந்தமானது என்றால் அவர் கிரையம் வாங்கியது. எனது தகப்பனார் எதன் மூலம் வந்த வருவாய் மூலம் கிரையம் பெற்றார் என்றால் எனது உறவினர்கள் கொடுத்த பணத்தின் மூலம் கிரையம் வாங்கியது. இந்த விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1951ம் ஆண்டு எனது அப்பாவிற்கும், எனது சித்தப்பாவும் கூர்சீட்டு மூலம் பிரித்துக்கொண்ட சொத்தின்மூலம் கிடைத்த வருவாய் மூலம் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. இந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றும், வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ7 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண். 222 1பி மொத்த விஸ்தீரணம் 2.73 செண்ட் எவ்வாறு வந்தது என்றும், அதற்குண்டான ஆவணம் நான் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சி தற்பொழுது பக்கத்துவீட்டுக்காரர் நிலம் என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ9 கணினி பட்டாவில் சர்வே எண். 222/4 மற்றும் 223 ஆகிய சர்வே எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பட்டாவில் மேற்படி சர்வே எண்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும், வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வேண்டுகேளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.